உ

சிவமயம்.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

2

உ

சிவமயம்.

தமிழ்வேதமாகிய

தேவாரப்பதிகங்களுள்

பதினைந்துபதிகம்.

இஃது,

திருவெண்காடு

ஆறுமுகசுவாமிகளால்

பார்வையிடப்பட்டு

சென்னை-சூளை

தி-கன்னியப்பமுதலியார்

அண்டுபிரதர் அவர்களது

பரப்பிரம்மமுத்திராக்ஷரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1897.

சென்னைசூளைதொட்டிசக்கிலிகுமாரப்பமுதலி

வீதி-39வது நெம்பர்



உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

அருளிச்செய்த

திருப்பிரமபுரத்திருப்பதிகம்.

———*———

பண்-நட்டபாடை.

தோடுடையசெவியன்விடையேறியோர் தூவெண்மதிசூடிக், காடுடையசுடலைப்பொடிபூசியென்னுள்ளங்கவர்கள்வ,னேடுடையமலரான்முனைநாட்பணிந்தேத்தவருள்செய்த, பீடுடையபிரமாபுரமேவிய பெம்மானிவனன்றே. ௧

முற்றலாமை யிளநாகமோடேன முளைக்கொம்பவைபூண்டு, வற்றலோடுகலனாப்பலிதேர்ந்தெனதுள்ளங்கவர்கள்வன், கற்றல்கேட்டலுடையார்பெரியார்கழல்கையாற்றொழுதேத்தப், பெற்றமூர்ந்த பிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. ௨

நீர்பரந்தநிமிர்புன்சடைமேலோர்நிலாவெண்மதிசூடி, யேர்பரந்தவினவெள்வளைசோரவென்னுள்ளங்கவர்கள்வ, னூர்பரந்தவுலகின் முதலாகியவோ ரூரிதுவென்னப், பேர்பரந்தபிரமாபுரமேவிய பெம்மானிவனன்றே. ௩

விண்மகிழ்ந்தம்மதிலெய்ததுமன்றி விளங்குதலை
யோட்டி, லுண்மகிழ்ந்துபலிதேரியவந்தெனதுள்ளங்
கவர்கள்வன், மண்மகிழ்ந்தவரவம்மலர்க்கொன்றைமலி
ந்தவரைமார்பிற், பெண்மகிழ்ந்தபிரமாபுரமேவியபெம்
மானிவனன்றே. ௪

ஒருமைபெண்மை யுடையன்சடையன் விடையூ
ரும்மிவனென்ன, வருமையாகவுரைசெய்யவமர்ந்தென
துள்ளங்கவர்கள்வன், கருமைபெற்றகடல்கொள்ளமித
ந்ததோர்காலமிதுவென்னப், பெருமைபெற்றபிரமாபு
ரமேவியபெம்மானிவனன்றே. ௫

மறைகலந்தவொலிபாடலொடாடலராகிமழுவே
ந்தி, யிறைகலந்தவின்வெள்வளைசோரவென்னுள்ளங்க
வர்கள்வன், கறைகலந்தகடியார்பொழி னீடுயர்சோலை
க்கதிர்சிந்தப், பிறைகலந்தபிரமாபுரமேவியபெம்மானி
வனன்றே ௬

சடைமுயங்குபுனலன்னலனெரி வீசிச்சதிர்
வெய்த, வுடைமுயங்குமரவோடுழிதந்தென துள்ள
ங்கவர்கள்வன், கடல்முயங்குகழி சூழ்குளிர்கானலம்
பொன்னஞ்சிறகன்னம், பெடைமுயங்குபிரமாபுர மே
வியபெம்மானிவனன்றே ௭

வியரிலங்குவரையுந்தியதோள்களை வீரம்விளைவி
த்த, வுயரிலங்கையரையன்வலிசெற்றெனதுள்ளங்கவ
ர்கள்வன், றுயரிலங்குமுலகிற்பல வூழிகடோறும்

பொழுதெல்லாம், பெயரிலங்குபிரமாபுரமேவியபெம்
மானிவனன்றே. ௮

தாணுதல்செய்திறைகாணியமாலொடு தண்டாம
ரையானு, நீணுதல்செய்தொழியந்நிமிர்ந்தானென
துள்ளங்கவர்கள்வன், வாணுதல்செய்மகளிர் முதலாகி
யவையத்தவரேத்தப்பேணுதல்செய்பிரமாபுர மேவிய
பெம்மானிவனன்றே. ௯

புத்தரோடுபொறியில்சமணும் புறங்கூறநெறிநி
ல்லா, வொத்தசொல்லவுலகம்பலிதேர்ந் தெனதுள்ள
ங்கவர்கள்வன், மத்தயானைமறுகவ்வுரி போர்த்ததோர்
மாயம்மிதுவென்னப், பித்தரபோலும்பிரமாபுரமேவி
யபெம்மானிவனன்றே. ௰

அருநெறியமறைவல்லமுனியகன் பொய்கைமலர்
மேய, பெருநெறியபிரமாபுரமேவியபெம்மானிவன்ற
ன்னை, யொருநெறியமனம்வைத்துணர்ஞானசம்பந்தன
னுரைசெய்த, திருநெறியதமிழ்வல்லவர்தொல்வினை தீ
ர்தலெளிதாமே. ௰௧

திருச்சிற்றம்பலம்.

—※—

திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம்.

——[*]——

பண் காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

மந்திரமாவதுநீறுவானவர்மேலதுநீறு
சுந்தரமாவதுநீறுதுதிக்கப்படுவதுநீறு
தந்திரமாவதுநீறுசமயத்திலுள்ளதுநீறு
செந்துவர்வாயுமைபங்கன்திருவாலவாயான்திருநீறே.

வேதத்திலுள்ளதுநீறுவெந்துயர்தீர்ப்பதுநீறு
போதந்தருவதுநீறுபுன்மைதவிர்ப்பதுநீறு
ஓதத்தகுவதுநீறுஉண்மையிலுள்ளதுநீறு
சீதப்புனல்வயல்சூழ்ந்ததிருவாலவாயான்திருநீறே

முத்திதருவதுநீறுமுனிவரணிவதுநீறு
சத்தியமாவதுநீறுதக்கோர்புகழ்வதுநீறு
பத்திதருவதுநீறுபரவவினியதுநீறு
சித்திதருவதுநீறுதிருவாலவாயான்திருநீறே ௩

காணவினியதுநீறுகவினைத்தருவதுநீறு
பேணியணிபவர்க்கெல்லாம்பெருமைகொடுப்பதுநீறு
மாணந்தகைவதுநீறுமதியைத்தருவதுநீறு
சேணந்தருவதுநீறுதிருவாலவாயான்திருநீறே. ௪

பூசவினியதுநீறுபுண்ணியமாவதுநீறு
பேசவினியதுநீறுபெருந்தவத்தோர்களுக்கெல்லா

மாசைகெடுப்பது நீறு வந்தமாவது நீறு
தேசப்புகழ்வது நீறு திருவாலவாயான் திருநீறே. ௫

அருத்தமதாவது நீறவல மறுப்பது நீறு
வருத்தந்தணிப்பது நீறு வானமளிப்பது நீறு
பொருத்தமதாவது நீறு புண்ணியர்பூசும் வெண்ணீறு
திருத்தகுமாளிகைசூழ்ந்த திருவாலவாயான் திருநீறே.

எயிலதுவட்டது நீறு இருமைக்குமுள்ளது நீறு
பயிலப்படுவது நீறு பாக்கியமாவது நீறு
துயிலைத்தடுப்பது நீறு சுத்தமதாவது நீறு
அயிலைப்பொலிதருசூலத் தாலவாயான் திருநீறே. ௭

இராவணன்மேலது நீறு வெண்ணத்தகுவது நீறு
பராவணமாவது நீறு பாவமறுப்பது நீறு
தராவணமாவது நீறு தத்துவமாவது நீறு
வராவணங்குந்திருமேனி யாலவாயான் திருநீறே. அ

மாலொடயனறியாத வண்ணமுமுள்ளது நீறு
மேலுறைதேவர்கடங்கள் மெய்யது வெண்பொடிநீறு
வேலவுடம்பிடர்தீர்க்கு மின்பந்தருவது நீறு
வாலமதுண்டமிடற்றெம் மாலவாயான் திருநீறே. ௯

குண்டிகைக்கையர்களோடு சாக்கியர்கூட்டமுங்கூடக்
கண்டிகைப்பிப்பது நீறு கருதவினியது நீறு
வெண்டிசைப்பட்டபொருளா ரேத்துந்தகையது நீறு
வண்டத்தவர்பணிந்தேத்து மாலவாயான் திருநீறே. ௰

ஆற்றலடல்விடையேறுமாலவாயான்றிருநீற்றைப்
போற்றிப்புகலிநிலாவும்பூசுரன்ஞானசம்பந்தன்
தேற்றித்தென்னனுடலுற்றதீப்பிணியாயினதீரச்
சாற்றியபாடல்கள்பத்தும்வல்லவர்நல்லவர்தாமே. ௰௧

திருச்சிற்றம்பலம்.

கோளறுதிருப்பதிகம்

பண்பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

வேயுறுதோளிபங்கன்விடமுண்டகண்டன் மிகந
ல்லவீணைதடவி, மாசறுதிங்கள்கங்கைமுடி மேலணிந்
தெனுளமேபுகுந்தவதனால், ஞாயிறுதிங்கள் செவ்வா
ய்புதன்வியாழம்வெள்ளிசனிபாம்பிரண்டுமுடனே, யா
சறுநல்லநல்லவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே. ௧

என்பொடுகொம்பொடாமையிவைமார்பிலங்கவெ
ருதேறியேழையுடனே, பொன்பொதிமத்தமாலைபுனல்
சூடிவந்தெனுளமேபுகுந்தவதனா, லொன்பதொடொ
ன்றொடேழுபதினெட்டொடாறுமுடனாயநாள்களவை
தா, மன்பொடுநல்லநல்லவவைநல்லநல்லவடியார்க்குமி
கவே ௨

உருவளர் பவளமேனி யொளிநீறணிந்து உமை
யோடும்வெள்ளைவிடைமேன், முருகலர்கொன்றைதிங்க

ண்முடிமேலணிந்தெனுளமே புகுந்தவதனாற், றிருமக ள்கலையதூர்திசெயமாதுபூமிதிசைதெய்வமானபலவும ருநெறிநல்லநல்லவவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே

மதிநுதல் மங்கையோடு வடபாலிருந்துமறை யோதுமெங்கள்பரம, னதியொடு கொன்றைமாலை மு டிமேலணிந்தெனுளமேபுகுந்தவதனாற், கொதியுறுகால னங்கிநமனோடுதூதர்கொடுநோய்களானபலவுமதிகுண நல்லநல்லவவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே. ௪

நஞ்சணிகண்டனெந்தைமடவாளொடு விடையேறுந ங்கள்பரமன், றுஞ்சிருள்வன்னிகொன்றைமுடிமேலணி ந்தனுளமேபுகுந்தவனால், வெஞ்சினவவுணரோடு மு ருமிடியுமின்னுமிகையானபூதமவைய, மஞ்சிடுநல்லநல் லவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே. ௫

வாள்வரியதளதாடைவரிகோவணத்தர்மடவாட் னோடுமுடனாய், நாண்மலர்வன்னிகொன்றைநதிசூடிவ ந்தனுளமேபுகுந்தவனாற், கோளரியுழுவையோடு கொ லையானகேழல்கொடுநாகமோடுகரடி, யாளரிநல்லநல்ல வவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே. ௬

செப்பிளமுலைநன்மங்கை யொருபாகமாக விடை யேறுசெவ்வனடைவா, ரொப்பிளமதியுமப்பு முடிமே லணிந்தெனுளமேபுகுந்தவதனால், வெப்பொடுகுளிரு

ம்வாதமிகையானபித்தும்வினையானவந்துநலியா, வப்ப டிநல்லநல்லவவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே. ௭

வேள்படவிழிசெய்தன்று விடைமேலிருந்துமட வாடனோடுமுடனாய், வாண்மதிவன்னிகொன்றைமலர் சூடிவந்தெனுளமேபுகுந்தவதனாலேழ் கடல்சூழி லங் கையரையன்றனோடுமிடரானவந்துநலியா, வாழ்கட னல் லநல்லவவைநல்லநல்ல வடியாரவர்க்குமிகவே. ௮

பலபலவேடமாகும்பரனாரிபாகன் பசுவேறுமெங் கள்பரமன், சலமகளோடெருக்குமுடிமேலணிந்தெனுள மேபுகுந்தவதனான், மலர்மிசையோனுமாலுமறையோ டுதேவர்வருகாலமானபலவு, மலைகடன்மேரு நல்லநல் லவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே. ௯

கொத்தலர்குழலியோடுவிசயற்குநல்குகுணமா யவேடவிகிர்தன், மத்தமுமதியுநாக முடிமேலணிந்தெ னுளமேபுகுந்தவதனாற், புத்தரோடமணைவாதிலழிவி க்குமண்ணறிருநீறுசெம்மைதிடமே, யத்தகுநல்லநல்ல வவைநல்லநல்லவடியாரவர்க்குமிகவே. ௰

தேனமர்பொழில்கொளாலைவிளைசெந்நெறுன்னி வளர்செம்பொனெங்குநிகழநான்முகனாதியாய்பிரமாபு ரத்துமறைஞானஞானமுனிவன், றானுறுகோளுநாளு மடியாரைவந்துநலியாதவண்ணமுரைசெய்யானசொன் மாலையோதுமடியார்கள்வானிலரசாள்வராணைநமதே.

திருச்சிற்றம்பலம்.

பஞ்சாக்ஷரப்பதிகம்

பண்—காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

துஞ்சலுந்துஞ்சலிலாதபோழ்தினு
நெஞ்சகநைந்துநினைமினாடொறும்
வஞ்சகமற்றடிவாழ்த்தவந்தகூற்
றஞ்சவுதைத்தனவஞ்செழுத்துமே க

மந்திரநான்மறையாகிவானவர்
சிந்தையுணின்றவர்தம்மையாள்வன
செந்தழலோம்பியசெம்மைவேதியர்க்
கந்தியுண்மந்திரமஞ்செழுத்துமே உ

ஊனிலுயிர்ப்பையொடுக்கியொண்சுடர்
ஞானவிளக்கினையேற்றிநன்புலத்
தேனைவழிதிறந்தேத்துவார்க்கிட
ரானகெடுப்பனவஞ்செழுத்துமே ௩

நல்லவர்தீயரெனாதுநச்சினர்
செல்லல்கெடச்சிவமுத்திகாட்டுவ
கொல்லநமன்றமர்கொண்டுபோமிடத்
தல்லல்கெடுப்பனவஞ்செழுத்துமே ௪

கொங்கலர்வன்மதன்வாளியைந்தகத்
தங்குளபூதமுமஞ்சவைம்பொழிற்

றங்கரவின்படமஞ்சுந்தம்முடை
யங்கையிலைவிரலஞ்செழுத்துமே ௫

தும்மலிருமறொடர்ந்தபோழ்தினும்
வெம்மைநரகம்விளைந்தபோழ்தினு
மிம்மைவினையடர்த்தெய்தும்போழ்தினு
மம்மையினுந்துணையஞ்செழுத்துமே. ௬

வீடுபிறப்பையறுத்துமெச்சினர்
பீடைகெடுப்பனபின்னைநாடொறு
மாடுகொடுப்பனமன்னுமாநட
மாடியுகப்பனவஞ்செழுத்துமே ௭

வண்டமரோதிமடந்தைபேணின
பண்டையிராவணன்பாடியுய்ந்தன
தொண்டர்கள்கொண்டுதுதித்தபின்னவர்க்
கண்டமளிப்பனவஞ்செழுத்துமே ௮

கார்வணனான்முகன்காணுதற்கொணாச்
சீர்வணச்சேவடிசெவ்விநாடொறும்
பேர்வணம்பேசிப்பிதற்றும்பித்தர்கட்
கார்வணமாவனவஞ்செழுத்துமே ௯

புத்தர்சமணர்கழுக்கையர்பொய்கொளாச்
சித்தத்தவர்கடெளிந்ததேறின
வித்தகநீறணிவார்வினைப்பகைக்
கத்திரமாவனவஞ்செழுத்துமே ௰

நற்றமிழ்ஞானசம்பந்தனான்மறை
கற்றவன்காழியர்மன்னனுன்னிய
வற்றமின்மாலையீரைந்துமஞ்செழுத்
துற்றனவல்லவரும்பராவரே ௰௧

திருச்சிற்றம்பலம்.

நமச்சிவாயத்திருப்பதிகம்

பண்—கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

காதலாகிக்கசிந்துகண்ணீர்மல்கி
யோதுவார்தமைநன்னெறிக்குய்ப்பது
வேதநான்கினுமெய்ப்பொருளாவது
நாதனாமநமச்சிவாயவே. ௧

நம்புவாரவர்நாவினவிற்றினால்
வம்புநாண்மலர்வார்மதுவொப்பது
செம்பொனார்திலகம்முலகுக்கெலா
நம்பனாமநமச்சிவாயவே ௨

நெக்குளார்வமிகப்பெருகிநினைந்
தக்குமாலைகொடங்கையிலெண்ணுவார்
தக்கவானவராய்த்தகுவிப்பது
நக்கனாமநமச்சிவாயவே ௩

இயமன்றூதருமஞ்சுவரின்சொலா
னயம்வந்தோதவல்லார்தமைநண்ணினா

னியமந்தானினைவார்க்கினியானெற்றி
நயனனாமநமச்சிவாயவே ௪

கொல்வாரேனுங்குணம்பலநன்மைக
ளில்லாரேனுமியம்புவாராயிடி
னெல்லாத்தீங்கையுநீங்குவரென்பரா
னல்லார்நாமநமச்சிவாயவே ௫

மந்தரம்மனபாவங்கண்மேவிய
பந்தனையவர்தாமும்பகர்வரேற்
சிந்தும்வல்வினைசெல்வமுமல்குமா
னந்திநாமநமச்சிவாயவே ௬

நரகமேழ்புகநாடினராயினு
முரைசெய்வாயினராயினுருத்திரர்
விரவியேபுகுவித்திடுமென்பரால்
வரதனாமநமச்சிவாயவே ௭

இலங்கைமன்னனையீரைந்தலைக்கன்மேற்
றலங்கொள்கால்விரல்சங்கரனூன்றலு
மலங்கிவாய்மொழிசெய்தவனுய்வகை
நலங்கொணாமநமச்சிவாயவே ௮

போதன்போதனகண்ணனுமண்ணறன்
பாதந்தான்முடிநேடியபண்பரா
யாதுங்காணபரிதாகியலந்தவ
ரோதுநாமநமச்சிவாயவே ௯

கஞ்சிமண்டையர் கையிலுண் கையர்கள்
வெஞ்சொன் மிண்டர் விரவில ரென்பரால்
விஞ்சையண்டர்கள் வேண்ட வமுதுசெய்
நஞ்சுண் கண்ட னமதையாறனே. ௰

நந்திநாமத் திருவையாறனைச்
சந்தையாற் றமிழ் ஞானசம்பந்தன் சொற்
சிந்தையான் மகிழ்ந் தேத்த வல்லாரெல்லாம்
பந்தபாச மறுக்க வல்லார்களே. ௰௧

திருச்சிற்றம்பலம்.

திருமயிலாப்பூர்ப் பூம்பாவைத் திருப்பதிகம்.

பண் - சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

மட்டிட்ட புன்னையங் கானன் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரமமர்ந்தா
னொட்டிட்ட பண்பி னுருத்திர பல்கணத்தார்க்
கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய். ௧

மைப்பயந்த வொண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பயந்த நீற்றான் கபாலீச் சரமமர்ந்தா
னைப்பசி யோண விழாவு மருந்தவர்கள்
துய்ப்பனவுங் காணாதே போதியோ பூம்பாவாய். ௨

வளைக்கை மடநல்லார் மாமயிலை வண்மறுகிற்
றுளக்கில் கபாலீச் சரத்தான் றொல்கார்த்திகைநாட்

டளத்தேந்திளமுலையார் தையலார் கொண்டாடும்
விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய். ௩

ஊர்திரைவேலையுலாவுமுயர்மயிலைக்
கூர்தருவேல்வல்லார்கொற்றங்கொள்சேரிதனிற்
காத்தருள்சோலைக்கபாலீச்சரமமர்ந்தா
னாதிரைநாட்காணாதே போதியோ பூம்பாவாய் ௪

மைப்பூசுமொண்கண்மடநல்லார்மாமயிலைக்
கைப்பூசுநீற்றான்கபாலீச்சரமமர்ந்தா
னெய்ப்பூசுமொண்புழுக்கனேரிழையார்கொண்டாடுந்
தைப்பூசங்காணாதே போதியோ பூம்பாவாய் ௫

மடலார்ந்ததெங்கின்மயிலையார்மாசிக்
கடலாட்டுக்கண்டான்கபாலீச்சரமமர்ந்தா
னடலானேறூருமடிகளடிபரவி
நடமாடல்காணாதே போதியோ பூம்பாவாய் ௬

மலிவிழாவீதிமடநல்லார்மாமயிலைக்
கலிவிழாக்கண்டான்கபாலீச்சரமமர்ந்தான்
பலிவிழாப்பாடல்செய்பங்குனியுத்திரநா
ளொலிவிழாக்காணாதே போதியோ பூம்பாவாய் ௭

தண்ணாவரக்கன்றோள்சாய்த்துகந்ததாளினான்
கண்ணார்மயிலைக்கபாலீச்சரமமர்ந்தான்
பண்ணார்பதினெண்கணங்கடம்பிரான்
கண்ணாரக்காணாதே போதியோ பூம்பாவாய் ௮

வரும்பயனையெழுநரம்பினோசையானைவரைசிலையாய் வானவர்கண்முயன்றவாளி, யரும்பயஞ்செய்யவுணர் புரமெரியக்கோர்த்தவம்மானையலைகடனஞ் சயின்றான் றன்னைச், சுரும்பமருங்குழன்மடவார்கடைக்கணோக்கி ற், றுளங்காதசிந்தையராய்த் துறந்தாருள்ளப், பெரு ம்பயனைப்பெரும்பற்றப்புலியூரானைப் பேசாதநாளெல் லாம்பிறவாநாளே. ௭

காரானையி னுரிவைப்போர்வையானைக் காமருபூங்கச் சியேகம்பன்றன்னை, யாரேனுமடியவர்கட்கணியான்ற ன்னையமரர்களுக்கறிவரிய வளவிலானைப், பாரோரும வ்விண்ணோரும்பணியநட்டம்பயில்கின்றபரஞ்சுடரைப்ப ரனையெண்ணில், பேரானைப்பெரும்பற்றப் புலியூரானைப் பேசாதநாளெல்லாம்பிறவாநாளே. ௮

முற்றாதபான்மதியஞ்சூடினானை மூவுலகுந் தானாய முதல்வன்றன்னைச், செற்றார்கள்புரமூன்றுஞ் செற்றா ன்றன்னைத், திகழொளியை மரகதத்தைத் தேனைப்பா லைக், குற்றாலத்தமர்ந்துறையுங்கூத்தன்றன்னைக் கூத்தா டவல்லானைக்கோனைஞானப், பெற்றார்கள்பெரும்பற்ற ப்புலியூரானைப்பேசாதநாளெல்லாம்பிறவாநாளே.

காரொளிய திருமேனிச்செங்கண்மாலுங் கடிக்கமல த்திருந்தயனுங்காணாவண்ணஞ், சீரொளியதழற்பிழம் பாய்நின்றதொல்லைத்திகழொளியைச் சிந்தனையைத் [illegible] சகதீர்க்கு, ஏரொளியை யிருநிலனும் விசும்புமாகி

செழுஞ்சுடர்க்கடந்தண்டத்தப்பானின்ற, பேரொளியை
ப்பெரும்பற்றப்புலியூரானைப்பேசாதநாளெல்லாம் பிற
வாநாளே. ௰

திருச்சிற்றம்பலம்.

— ※ —

அப்பர்சுவாமிகளருளிய

திருவதிகைவீரட்டானம்.

பண் கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

கூற்றாயினவாறுவிலக்ககிலீர்கொடுமைபலசெய்தன
நானறியேன், ஏற்றாயடிக்கேயிரவும்பகலும் பிரியாதுவ
ணங்குவனெப்பொழுதுந், தோற்றாதென்வயிற்றினகம்
படியேகுடரோடு துடக்கிமுடக்கியிட, வாற்றேனடி
யேனதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே.

நெஞ்சமுமக்கேயிடமாகவைத்தேனினையாதொரு
போதுமிருந்தறியேன், வஞ்சம்மிதுவொப்பதுகண்டறி
யேன்வயிற்றோடுதுடக்கிமுடக்கியிட, நஞ்சாகிவந்தென
னைநலிவதனைநணுகாமற்றுரந்துகரந்துமிடீ, ரஞ்சேலு
மென்னீரதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே

பணிந்தாரனபாவங்கள்பாற்றவல்லீர் படுவெண்ட
லையிற்பலிகொண்டுழல்வீர், துணிந்தேயுமக்காட்செய்

ழலுற்றாற்சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர், பிணிந்தார்பொடிகொண்டுமெய்பூசவல்லீர்பெற்றமேற்றுகந்தீர்சுற்றும்வெண்டலைகொண், டணிந்தீரடிகேளதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே ௫

முன்னம்மடியேனறியாமையினான் முனிந்தென்னைநலிந்துமுடக்கியிடப், பின்னையடியே னுமக்காளும் பட்டேன்சுடுகின்றதுசூலைதவிர்த்தருளீர், தன்னை யடைந்தார்வினை தீர்ப்பதன்றோதலையாயவர் தங்கடனாவதுதான், அன்னநடையாரதிகைக்கெடில வீரட்டானத் துறையம்மானே, ௬

காத்தாள்பவர்காவலிகழ்ந்தமையாற்கரைநின்றவர்கண்டுகொளென்றுசொல்லி, நீத்தாய்கயம்புக நூக்கியிட நிலைக்கொள்ளும் வழித்துறையொன்றறியேன், வார்த்தையிதுவொப்பது கேட்டறியேன்வயிற்றோடுதுடக்கிமுடக்கியிட, வார்த்தார்புனலாரதிகைக்கெடில வீரட்டானத்துறையம்மானே ௭

சலம்பூவொடுதூபமறந்தறியேன் றமிழோடிசைபாடன்மறந்தறியே, னலந்தீங்கிலுமுன்னைமறந்தறியே, னுன்னாமமென்னாவின்மறந்தறியே, னுலந்தார்தலையிற்பலிகொண்டுழல்வா யுடலுள்ளுறுசூலைதவிர்த்தருளா, யலந்தேனடியே னதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே.

உயர்ந்தேன்மனைவாழ்க்கையுமொண்பொருளுமொருவர்தலைகாவலிலாமையினால், வயந்தேயுமக்காட்செய்

துவாழலுற்றால்வலிக்கின்றசூலைதவிர்த்தருளீர் பயந்தேயென்வயிற்றினகம்படியேபறித்தலவிரட்டில் வீரட்டானத்துறையம்மானே ௭

வலித்தேன்மனைவாழ்க்கைமகிழ்ந்தடியேன்வஞ்சம்மனமொன்றுமிலாமையினாற், சலித்தாலொருவர்துணையாருமில்லைச்சங்கவெண் குழைக்காதுடை யெம்பெருமான், கலித்தேயென்வயிற்றினகம்படியே கலக்கிமலக்கிட்டுக்கவர்ந்துதின்ன, அலுத்தேனடியேனதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே ௮

பொன்போல மிளிர்வதோர் மேனியினீர் புரிபுன்சடையீர்மெலியும்பிறையீர், துன்பேகவலைபிணியென்றிவற்றைநணுகாமற்றுரந்துகறுத்தெம்மை யாளகில்லீர், என்போலிகளும்மையினித்தெளியாரடியார் படுவதிதுவேயாகில், அன்பேயமையுமதிகைக்கெடில் வீரட்டானத் துறையம்மானே ௯

போர்த்தாயங்கோரானையினீருரித்தோல்புறங்காடரங்காநடமாடவல்லாய், ஆர்த்தானரக்கன்றனைமால்வரைக்கீழடர்த்திட்டருள்செய்தவதுகருதாய், வேர்த்தும்புரண்டும்விழுந்துமெழுந்தாலென்வேதனையானவிலக்கியிடாய், ஆர்த்தார்புனல்சூழதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே ௰

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார் — அருளிச்செய்த

திருவெண்ணெய்நல்லூர்

பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

பித்தாபிறைசூடிபெருமானே யருளாளா, வெத்தா
ன்மறவாதேநினைக்கின்றேன்மனத்துன்னை, வைத்தாய்
பெண்ணைதென்பால் வெண்ணெய்நல்லூரருட்டுறை
யு, ளத்தாவுனக்காளாயினியல்லேனெனலாமே க

நாயேன்பலநாளுநினைப்பின்றிமனத்துன்னைப், பே
யாய்த்திரிந்தெய்த்தேன்பெறலாகாவருள்பெற்றேன்
வேயார்பெண்ணைத்தென்பால் வெண்ணெய்நல்லூரரு
ட்டுறையு, ளாயாவுனக்காளாயினியல்லேனெனலாமே

மன்னேமறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னைப்
பொன்னேமணிதானேவயிரமேபொருதுந்தி, மின்னா
ர்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறை
யு,ளன்னேயுனக்காளாயினியல்லேனெனலாமே. ௩

முடியேனினிப்பிறவேன்பெறின்மூவேன் பெற்ற
மூர்த்தி, கொடியேன்பலபொய்யேயுரைப்பேனைக்குறி
க்கொள்ளீ, செடியார்பெண்ணைத் தென்பால வெண்
ணெய்நல்லூரருட்டுறையு, ளடிகேளுனக்காளாயினிய
ல்லேனெனலாமே. ௪

பாதம்பணிவார்கள்பெறும்பண்டம்மதுபணியா, யாத
ன்பொருளானேனறிவில்லேனருளாளா, தாதார்பெ
ண்ணைத்தென்பால் வெண்ணெய்நல்லூரருட்டுறையு,
ளாதீயுனக்காளாயினியல்லேனெனலாமே. ௪

தண்ணார்மதிசூடீதழல்போலுந்திருமேனீ, யெண்
ணார்புரமூன்றெரியுண்ண நகைசெய்தாய், மண்ணார்
பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளண்ணாவுனக்காளாயினியல்லேனெனலாமே. ௫

ஊனாயுயிரானாயுடலானாயுலகானாய், வானாய்நிலனானா
ய்கடலானாய்மலையானாய், தேனார்பெண்ணைத்தென்பா
ல்வெண்ணெய்நல்லூரருட்டுறையு, ளானாயுனக்காளாயி
னியல்லேனெனலாமே. ௬

ஏற்றார்புரமூன்றுமெரியுண்ணச்சிலைதொட்டாய், தே
ற்றாதனசொல்லித்திரிவேனோசெக்கர்வானீ, ரேற்றாய்
பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறை
யு, ளாற்றாயுனக்காளாயினியல்லேனெனலாமே. ௭

மழுவாள்வலனேந்தீமறையோதிமங்கைபங்கதொ
ழுவாரவர்துயராயினதீர்த்த லுன்றன்றொழிலே, செ
ழுவார்பெண்ணைத்தென்பால் வெண்ணெய்நல்லூரரு
ட்டுறையுளழகாவுனக்காளாயினியல்லேனெனலாமே.

காரூர்புனலெய்திக்கரைகல்லித்திரைக்கையாற், பா
ரூர்புகழெய்தித்திகழ்பன்மாமணியுந்திச், சீரூர்பெண்
ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையு, ளா
ரூரனெம்பெருமாற்காளல்லேனெனலாமே. ௰

திருச்சிற்றம்பலம்.

தேவாரப்பதிகங்கள்.

முற்றிற்று

முற்றிற்று

திருச்சிற்றம்பலம்.

தேவாரப்பதிகங்கள் அட்டவணை.

[*]

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் அருளிய

திருச்சிற்றம்பலம்.

ற்றாமரைமலர்மேனான்முகனுநாரணனு
முற்றாங்குணர்கிலாமூர்த்திதிருவடியைக்
கற்றார்களேத்துங்கபாலீச்சரமமர்ந்தான்
பொற்றாப்புக்காணாதேபோதியோபூம்பாவாய் ௯
உரிஞ்சாயவாழ்க்கையமணுடையைப்போர்க்கு
மிருஞ்சாக்கியர்களெடுத்துரைப்பநாட்டிற்
கருஞ்சோலைசூழ்ந்தகபாலீச்சரமமர்ந்தான்
பெருஞ்சாந்திகாணாதேபோதியோபூம்பாவாய் ௰
கானமர்சோலைக்கபாலீச்சரமமர்ந்தான்
றேனமர்பூம்பாவைப்பாட்டாகச்செந்தமிழால்
ஞானசம்பந்தனலம்புகழ்ந்தபத்தும்வல்லார்
வானசம்பந்தத்தவரோடும்வாழ்வாரே ௰௧

திருச்சிற்றம்பலம்.

திருவாலவாய்ப்பதிகம்.

பண்—புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

மங்கையர்க்கரசிவளவர்கோன்பாவை வரிவளைக்கை மடமானி, பங்கயச்செல்விபாண்டிமாதேவி பணிசெய் துநாடொறும்பரவ, பொங்கழலுருவன்பூதநாயகனா ல்வேதமும்பொருள்களுமருளி, அங்கயற்கண்ணிதன் னொடும்வாலவாயாவதுமிதுவே.

வெற்றவேயடியாரடிமிசைவீழும விருப்பினன்வெ ள்ளைநீறணியுங், கொற்றவன்றனக்குமந்திரியாய குல

ச்சிறைகுலாவிநின்றேத்த, வொற்றைவெள்விடையா னும்பாகனுலகினிலியற்கையையொழித்திட், டற்றவர்க்கற்றசிவனுறைகின்ற வாலவாயாவதுமிதுவே.

செந்துவர்வாயாள் சேலனகண்ணாள் சிவன்றிருநீற்றினைவளர்க்கும், பந்தணைவிரலாள் பாண்டிமாதேவிபணிசெய்பாரிடைநிலவுஞ், சந்தமார்தரளம்பாம்புநீர்மத்தந் தண்ணெருக்கம்மலர்வன்னி, யந்திவான்மதிசேர்சடைமுடியண்ணலாலவாயாவதுமிதுவே ௩

கணங்களாய்வரினுந் தமியராய்வரினு மடியவர்தங்களைக்கண்டாற், குணங்கொடுபணியுங் குலச்சிறைபரவுக் கோபுரஞ்சூழ்மணிக்கோயில், மணங்கமழ்கொன்றை வாளராமதியம் வன்னிவண் கூவிளமாலை, யணங்குவீற்றிருந்த சடைமுடியண்ணலாலவாயாவதுமிதுவே ௪

செய்யதாமரையின்மேலன்னமேயனையசேயிழைதிருநுதற்செல்வி, பையரவல்குற் பாண்டிமாதேவிநாடொறும் பணிந்தினிதேத்த, வெய்யவெஞ்சூலம்பாசமங்குசமான்விரிகதிர்மழுவுடன்றரித்த வையனாருமையோ டின்புறுகின்றவாலவாயாவதுமிதுவே ௫

நலமிலராகநலமதுண்டாகநாடவர்நாடறிகின்ற, குலமிலராகக்குலமதுண்டாகத்தவம்பணிகுலச்சிறைபரவுங் கலைமலிகரத்தன் மூவிலைவேலன் கரியுரிமூடியகண்ட, னலைமலிபுனல்சேர்சடைமுடியண்ணலாலவாயாவதுமிதுவே. ௬

முத்தின்றாழ்வடமுஞ் சந்தனக்குழம்புநீறுந்தன்மார்பினின்முயங்கப், பத்தியார்கின்றபாண்டிமாதேவிபாங்கொடுபணிசெயநின்ற சுத்தமார்பளிங்கின் பெருமலையுடனேசுடர்மரகதமடுத்தாற்போ, லத்தனாருமையோடின்புறுகின்றவாலவாயாவதுமிதுவே ௭

நாவணங்கியல்பாமஞ்செழுத்தோதி நல்லராய் நல்லியல்பாகுங், கோவணம்பூதிசாதனங் கண்டாற்றொழுதெழுகுலச் சிறைபோற்ற, வேவணச்சிலையா லிராவணன்றிண்டோளிருபதுநெரிதரவூன்றி, யாவணங்கொண்டசடைமுடியண்ணலாலவாயாவதுமிதுவே ௮

மண்ணெலாநிகழமன்னனாய்மன்னுமணிமுடிச்சோழன்றன்மகளாம், பண்ணினேர்மொழியாள் பாண்டிமாதேவிதன்பாங்கினாற்பணிசெய்துபரவ, விண்ணுளாரிருவர்கீழொடுமேலுமளப்பரிதாம் வகைநின்ற, வண்ணலாருமையோடின்புறுகின்றவாலவாயாவதுமிதுவே. ௯

தொண்டராயுள்ளார்திசைதிசைதொறுந்தொழுதுதன்குணத்தினைக்குலாவக், கண்டுநாடோறுமின்புறுகின்ற குலச்சிறைகருதிநின்றேத்தக், குண்டராயுள்ளார் சாக்கியர்தங்கள் குறியழித்தருள்செய்தபெருமா, னண்டநாயகன்றானமர்ந்துவீற்றிருந்தவாலவாயாவதுமிதுவே. ௰

பன்னலம்புணரும் பாண்டிமாதேவி குலச்சிறையெனுமிவர்பணியு, மன்னலம்பெறுசீராலவாயீசன்றிருவ

டியார்களைப்போற்றி, மன்னலம்பெரியனழியுள்ஞான
ம்சந்தன்செந்தமிழ்க்கோவை, யின்னிலம்பாட வல்லவரி
டையோரேத்தவீற்றிருப்பவரிகாதே. ௰௧

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார் அருளிச்செய்த

கோயிற்றிருநேரிசை.

பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

பத்தனாய்ப்பாடமாட்டேன்பரமனேபரமயோகி
யெத்தினாற்பத்திசெய்கேனென்னைநீயிகழவேண்டா
முத்தனேமுதல்வாதில்லையம்பலத்தாடுகின்ற
வத்தாவுன்னாடல்காண்பானடியனேன்வந்தவாறே. ௧

கருத்தனாய்ப்பாடமாட்டேன்காம்பனதோளிபங்கா
வொருத்தராலறியவொண்ணா திருவுருவுடையசோதி
திருத்தமாந்தில்லைதன்னுட்டிகழ்ந்தசிற்றம்பலத்தே
நிருத்தநான்காணவேண்டிநேர்படவந்தவாறே ௨

கேட்டிலேனினிப்பிறவிகேட்குமாகேட்டியாகி
லொட்டினேனுன்றன்பாதப்படநெஞ்சினுள்ளே
மாட்டினீர்வளையபாயுமச்சிற்றம்பலத்தே
கூட்டமாக்குனிமுயலான்கூடியாடுமாறே ௩

இச்சைதனை இசைப்பியாதே செறிவுடையடிமைசெய்ய
வெந்தைநீயருளிச்செய்யாய் யாதுநான்செய்வதென்னே
செந்தியார் வேள்வியோவாத் தில்லைச்சிற்றம்பலத்தே
யந்தியும்பகலுமாடவடியிணை யலசுங்கொலோ ௪
அண்டவர் [illegible] [illegible]ன்றன்பாதங்
கொண்டிருந்தாடிப்பாடிக் [illegible] [illegible]பிதற்றிலே
வண்டுபண்பாடுஞ்சோலைத் [illegible] சிற்றம்பலத்தே
பெண்டிசையொருபாகத் [illegible] பாடுமாறே ௫
பார்த்திருந்தடியனேன்நான் பரவுவன்பாடிப்பாடி
மூர்த்தியேயென்பனுன்னை மூவரின்முதல்வனென்பன்
ஏத்துவாரிடர்கள்தீர்ப்பாய் தில்லைச்சிற்றம்பலத்துக்
கூத்தாவுன்கூத்துக்காண்பான் கூடநான்வந்தவாறே
பொய்வினை தவிரவிட்டுப் புறமலர்வடிமைசெய்ய
[illegible] அருளிச்செய்யாய் [illegible] மூர்த்தி
[illegible] [illegible] சிற்றம்பலத்தே
[illegible] காண்பான் அடியனேன்வந்தவாறே ௭

மனத்திறத்திகைக்குநாளும் மாண்பலா நெறிகளான
மாவினை, [illegible] என்செய்கேனோ [illegible]
தனாதனே, [illegible] தில்லைச்சிற்ற
ம்பலத்தே, [illegible] காண்பான் [illegible]
வந்தவாறே. ௮

[illegible]
[illegible]

மஞ்சடைச்சோலைத்தில்லைமல்குசிற்றம்பலத்தே
யஞ்சலைல்காணாவிணையேறேயழகநீயாடுமாறே. ௯

மண்ணுண்டமாலவனுமலர்மிசைமன்னினுனும
விண்ணுண்டதிருவுருவம்விரும்பினார்காணமாட்டார்
இண்ணுண்டதிருமேனிக்கதத்தில்லைசிற்றம்பலத்த
பண்ணுண்டபாடலோடுபாயநீயாடுமாறே ௰

திருச்சிற்றம்பலம்.

நமச்சிவாயப்பதிகம்.

பண்காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

சொற்றுணைவேதியன்சோதிவானவன்
பொற்றுணைத்திருந்தடிபொருந்தக்கைதொழ
க்கற்றுணைப்பூட்டியோர்கடலிற்பாய்ச்சினு
நற்றுணையாவதுநமச்சிவாயவே ௧

பூவினுக்கருங்கலம்பொங்குதாமரை
யாவினுக்கருங்கலமரனஞ்சாடுதல்
கோவினுக்கருங்கலங்கோட்டமிலது
நாவினுக்கருங்கலநமச்சிவாயவே ௨

விண்ணுறவடுக்கியவிறகின்வெவ்வழ
லுண்ணியபுகிலவையொன்றுமில்லையால்
பண்ணியவுலகினிற்பயின்றபாவத்தை
நண்ணிநின்றறுப்பதுநமச்சிவாயவே ௩

இடுக்கண்பட்டிருக்கினுமிரந்தியாரையும்
உடுக்கிற்பிரானென்றுவினவுவோமல்லோ
மடுக்கற்கீழ்க்கிடக்கினுமருளினாமுற்ற
நடுக்கத்தைக்கெடுப்பதுநமச்சிவாயவே ௪

வெந்தநீறருங்கலம்விரதிகட்கெலா
மந்தணர்க்கருங்கலமருமறையாறங்கந்
திங்களுக்கருங்கலந்திகழுநீண்முடி
நங்களுக்கருங்கலநமச்சிவாயவே ௫

சலமிலன்சங்கரன்சார்ந்தவர்க்கலா
னலமிலநாடொறுநல்குவானலஞ்
குலமிலராகினுங்குலத்துக்கேற்பதோர்
நலமிகக்கொடுப்பதுநமச்சிவாயவே ௬

வீடினாருலகினில்விழுமியதொண்டர்
கூடினார்நெறிகூடச்சென்றலு
மோடினேனோடிச்சென்றுருவங்காண்டலு
நாடினேனாடிற்றுநமச்சிவாயவே ௭

இல்லகவிளக்கதுவிருள்கெடுப்பது
சொல்லகவிளக்கதுசோதியுள்ளது
பல்லகவிளக்கதுபலருங்காண்பது
நல்லகவிளக்கதுநமச்சிவாயவே ௮

முன்னெறியாகியமுதல்வன்முக்கணன்
றன்னெறியேசரணாதறிண்ணமே

பங்கெறியேசென்றங்கடைந்தவர்க்கெலா
நன்னெறியாவதுநமச்சிவாயவே ௯
மாப்பிணைதழுவியமாதொர்பாகத்தன்
பூப்பிணைதிருந்தடிபொருந்தக்கைதொழ
நாப்பிணைதழுவியநமச்சிவாயப்பத்
தேத்தவல்லார்தமக்கிடுக்கணில்லையே ௰

திருச்சிற்றம்பலம்.

கோயிற்றிருவிருத்தம்.

பண் கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

பாளையுடைக்கமுகோங்கிப்பன்மாட நெருங்கியெங் கும், வாளையுடைப்புனல்வந்தெறிவாழ் வயறில்லைத ன்னு, ளாளவுடைக்கழற்சிற்றம்பலத்தாடல்கண்டா ற், பீளையுடைக்கண்களாற் பின்னைப்பேய்த் தொண்டர் காண்பதென்னே. ௧

பொருவிடையொன்றுடைப்புண்ணியமூர்த்திபுலிய தள, னுருவுடையம்மலைமங்கைமணாளனுலகுக்கெல்லா ந், திருவுடையந்தணர்வாழ்கின்ற தில்லைச்சிற்றம்பலவ ன், றிருவடியைக்கண்ட கண்கொண்டுமற்றினிக் காண்ப தென்னே ௨

தொடுத்தமலரொடு தூபமுஞ்சாந்துங்கொண் டெப் போது, மடுத்துவணங்குமயனொடுமாலுக்குங் காண்ப ரியான், பொடிக்கொண்டணிந்து பொன்னாகிய தில்லை

ச்சிற்றம்பலவ,னுநிக்க [illegible] லகண்டகண்கொண்டுமற்றி னிக்காண்பதென்னே ௪

வைச்சபொருணமக்காகுமென்றெண்ணிநமச்சிவாய வச்சமொழித்தேனணிதில்லையம்பலத்தாடுகின்ற, பிச்சன்பிறப்பிலிபேர் நந்தியுந்தியின்மேலசைத்த, கச்சினழகுகண்டாற்பின்னைக்கண்கொண்டுகாண்பதென்னே.

செய்ஞ்ஞின்றநீலமலர்கின்ற தில்லைச்சிற்றம்பலத்தெம் மைஞ்ஞின்றவொண்கண்மலைமகள்கண்டுமகிழ்ந்துநின்று நெய்ஞ்ஞின்றெரியும்விளக்கொத்தநீலமணிமிடற்றான், கைஞ்ஞின்றவாடல்கண்டாற்பின்னைக்கண்கொண்டு காண்பதென்னே ௫

ஊனத்தைநீக்கியுலகறியவென்னை யாட்கொண்டவன்றேனொத், தெனக்கினியான்றில்லைச் சிற்றம்பலவ னெங்கோன், வானத்தவருய்யவன்னஞ்சையுண்டகண்டத்திலங்கு,மேனத்தெயிறுகண்டாற் பின்னைக்கண்கொண்டு காண்பதென்னே ௬

தெரித்தகணையாற்றிரிபுரமூன்றுஞ்செந்தீயின்மூழ்க, வெரித்தவிறைவனிமையவர்கோமானிணையடிகடரித்தமனத்தவர்வாழ்கின்றதில்லைச்சிற்றம்பலவன், சிரித்தமுகங்கண்டகண் கொண்டுமற்றினிக் காண்பதென்னே. ௭

சுற்றுமமரர்சுரபதிநின்றிருப்பாதமல்லாற், பற்றொன்றிலோமென்றழைப்பப்பரவையு ணஞ்சையுண்டான்,

5982

செற்றார்களைத் தீவிழித்தான் றில்லையம்பலவ, னொற்றி யூரகங்கண்டகண் கொண்டுமற் றினிக்காண் பதென்னே.

ஒத்தத் தெழுந்த செழுங்கமலத் தன்ன சேவடிகள், வைத்தமைத்தவா வாழ்கின்ற தில்லைச் சிற்றம்பலவன், முத்தும் வயிரமு மாணிக்கந் தன்னுள் விளங்கிய தூ, மத்த மலர்க்கண்டகண் கொண்டு மற்றினிக் காண்பதென்னே.

தருக்கு மிகுத்துத் தன்றோள் வலியின்னித் தடவரையைப், பரைக்கைகளா லெடுத்தார்ப்ப மலைமகள் கோன்சி ரித்து, வரக்கன் மணிமுடி பத்து மிற்ற தில்லையம்பலவ, னெருக்கி மிதித்த விரல்கண்டகண் கொண்டு காண்பதென் னே. ௰

திருச்சிற்றம்பலம்.

திருவண்ணாமலை — திருநேரிசை,

பண் — கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

ஓதிமா மலர்கடூவி யுமையவள் பங்கா மிக்கச், சோதியே துலக்குமெண்டோட் சுடர்மழுப் படையினானே, மாதியோர் கூறுவே யணியண்ணாமலை யுளானே, நீதியா னின்னையல்லா னினையுமா நினைவிலேனே. க

பண்டனை வென்ற வின்சொற் பாவையோர் பங்க நீல, கண்டனே கார்கொள் கொன்றைக் கடவுளே

காலபாதா, வண்டணையார்கோவேயண்ணாமலையு
ளானே, கொண்டேனுன்னையல்லாற் சொல்லுமா
சொல்விலேனே ௨

உருவமுமுயிருமாகியோதியவுலகுக்கெல்லாம், பெரு
வினைபிறப்புவீடாயநின்றவெம்பெருமான்மிக்க, வருவி
பொன்சொரியுமண்ணாமலையுளவண்டர்கோவே,மருவி
னின்பதமல்லாற்பற்றொன்றுமாடிலேனே ௩

பைம்பொனேபவளக்குன்றே பரமனே பால்வெண்
ணீறு, செம்பொனேமலர்செய்பாதா சீர்கருமணியேமி
க்க, வம்பொனேகொழிக்குவீழுமண்ணாமலையுளா
னே, வெம்பொனேயுன்னையல்லாலேதுமொன்றினைவிலே
னே. ௪

பிறைதாணிமுடியினானே பிஞ்ஞகாபெண்ணோர்பாகா
மறைவலவிறைவாவண்டா கொன்றையாய்வாமதேவா
வறாமழுவமாமேதத்து, மண்ணாமலையுளானேயிறைவ
னேயுன்னையல்லாலியானுநானினைவிலேனே. ௫

புரிசடைமுடியின்மேலோர்பெருப்புனற்கங்கைவை
த்துச், சரியுரிபோர்வையாயக்கருதியகாலகாலா, வரிகு
மெலிர்கவண்ணாமலையுளாயரின்மிக்க, வரிமிகுவண்டு
பண்செய்பாதகாண்மறப்பிலேனே. ௬

இரவியுமதியும்விண்ணுமிருநிலப்புனலுங்காற்றுமு
ரகமார்பவனமெட்டுந்திசையொளியுருவமாயாயவழி

ழ்மணிகொள்சேதி யணியண்ணாமலையுளானே, பாவுநின்
பாதமல்லாற்பாமொன்மற்றிலேனே. ௭

பார்த்தனுக்கன்றாநல்கிப்பாசுபதத்தையீந்தாய்
நீர்த்ததும்புலாவுகங்கைசேர்முடிநிலாவைவைத்த
யார்த்துவந்தீண்டுகொண்டவண்ணாமலையுளானே
தீர்த்தனேநின்றன்பாதத்திறமலாற்பிறமிலேனே.

பானுசெய்முதலாயிக்கபசுவிலக்காவோனே
மாலுநான்முகனுங்கூடிக்காண்கிலாவகையுநின்று
பாலுநீர்கொண்டபுல்பூசுமணியண்ணாமலையுளானே
வாலுடையிடையாயுன்றன்மலரடிமறபபிலேனே ௯

இராமான்றிபாதுயில்லாக்காலனைக்கடந்தெம்மா
னாத்திறல்வணாணா பூதகவொருவிமனுநியிற்றலே
சிரக்கனைதெரித்தவண்ணாமலையுளாயமோறே
சித்திறல்வணக்கேயேத்தித்திருவடிமறப்பிலேனே

திருச்சிற்றம்பலம்.

கோயிற்றிரு-விருத்தம்.

பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

கருநட்டகண்டனையண்டத்தலைவனைக் கற்பகத்தைச்
பெருநட்டமும்மதிலெய்யவல்லானைச்செந்தீமுழங்கத்,

திருநட்டமாடியைத்தில்லைக்கிறையைசிற்றம்பலத்துப் பெருநட்டமாடியைவானவர்கோனென்று வாழ்த்துவனே. க

ஒன்றியிருந்துநினைமின்களுந்தமக்கூனமில்லைக், கன்றியகாலனைக்காற்கடிந்தா னடியவற்காச், சென்று தொழுமின்கடில்லையிற்சிற்றம்பலத்துநட்டமென்று வந்தாயென்னுமெம்பெருமான்றன்றிருக்குறிப்பே உ

கன்மனவீர்கழியுங்கருத்தேசொல்லிக்காண்பதென் னே,நன்மனவார்தவில்தில்லையுட் சிற்றம்பலத்துநட்டம், பொன்மலையில்வெள்ளிக்குன்றதுபோலப்பொலிந்திலங்கி, யென்மனமேயொன்றிப்புக்கனன்போந்தசுவடில்லையே. ௩

குனித்தபுருவமுங்கொவ்வைச்செவ்வாயிற்கு மின் சிரிப்பும,பனித்தசடையும்பவளமபொன்மேனியிற்பா ல்வெண்ணீறு, மினித்தமுடையவெடுத்த பொற்பாத முங்காணப்பெற்ருல், மனிதப்பிறவியும் வேண்டுவ தேயிந்தமாநிலத்தே ௪

வாய்த்ததுநந்தமக்கீதோர்பிறவிமதித்திடுமின், பார் த்தற்குப்பாசுபதமருள் செய்தவன்பத்தருள்ளீர், கோ த்தன்றுமுப்புரந்தீவளைத்தான் றில்லையம்பலத்துக்,கூத் தனைக்காட்டப்பட்டிருப்பதன்றோநந்தங்கூழைமையே. ௫

பூத்தன பொற்சடை பொன்போல் மிளிரப் புரிகணங்க, ளார்த்தன கொட்டி யரித்தன பல்குறட் பூதகணந், தேத்தென வென்றிசை வண்டுகள் பாடுஞ் சிற்றம்பலத்துக், கூத்தனிற் கூவது வல்லாருளரோ வென்றன் கோல்வளைக்கே ௬

முடிகொண்ட மத்தமு முக்கண்ணி னோக்கு முறுவலிப்புந், துடிகொண்ட கையுந் துதைந்த வெண்ணீறுஞ் சுரிகுழலாள், படிகொண்ட பாகமும் பாய்புலித் தோலுமென் பாவிநெஞ்சிற், குடிகொண்ட வாதில்லையம்பலக் கூத்தன் குரைகழலே ௭

படைக்கலமாக வுன்னாமத் தெழுத் தஞ்சென்னாவிற் கொண்டேன், இடைக்கலமல்லே னெழுபிறப்புமுனக் காட்செய்கின்றேன், தூநீறணிந்துன்னடைக்கலங் கண்டாயணிதில்லைச் சிற்றம்பலத்தரனே ௮

பொன்னொத்த மேனிமேல் வெண்ணீறணிந்து புரிசடைக்கண், மின்னொத்திலங்கப் பலிதேர்ந்துழலும் விடங்கர்வேடஞ், சின்னத்தினான்மலி தில்லையுட் சிற்றம்பலத்து நட்டம், என்னத்தனாடல் கண்டின்புற்றதா லிவ்விருநிலமே ௯

சாடவெடுத்தது தக்கன்றன் வேள்வியிற் சந்திரனை, வீடவெடுத்தது காலனை நாரணனான்முகனுந், தேடவெடுத்தது தில்லையுட் சிற்றம்பலத்து நட்டம் ஆடவெடுத்திட்ட பாதமன்றோ நம்மையாட்கொண்டதே ௰

திருச்சிற்றம்பலம்.

கோயிற்பெரியதிருத்தாண்டகம்.

——[*]——

திருச்சிற்றம்பலம்.

அரியானையந்தணர்தஞ்சிந்தையானையருமறையினக
த்தானையணுவையார்க்குந், தெரியாததத்துவனைத்தே
னைப்பாலைத்திகழொளியைத்தேவர்கடங்கோனைமற்றை
க், கரியானைநான்முகனைக்கனலைக்காற்றைக்கனைகடலைக்
குலவரையைக்கலந்துநின்றபெரியானைப்பெரும்பற்றப்
புலியூரானைப்பேசாதநாளெல்லாம்பிறவாநாளே. க

கற்றானைக்கங்கைவார்சடையான்றன்னைக்காவிரிசூழ்
வலஞ்சுழியுங்கருதினானை, அற்றார்க்குமலந்தார்க்குமரு
ள்செய்வானை ஆரூர்புகுவானையறிந்தோமன்றே,ம
ற்றாருந்தன்னொப்பாரில்லாதானை வானவர்களெப்பொ
ழுதும்வணங்கியேத்தப், பெற்றானைப் பெரும்பற்றப்
புலியூரானைப்பேசாதநாளெல்லாம்பிறவாநாளே உ

கருமானினுரியதளேயுடையாவீக்கிக் கனைகழல்கள்
கலந்தொலிப்பவனலைக்கையேந்தி, வருமானத்திரடோ
ள்களைமட்டித்தாடவளர்திங்கள்சடைசரிக்குமாதே
ர்நோக்கி, அருமானவாண்முகத்தாளமரநோக்கியம
ரர்கணமடிவணங்கவாடுகின்ற, பெருமானைப்பெரும்ப
ற்றப்புலியூரானைப்பேசாதநாளெல்லாம்பிறவாநாளே.

அருந்தவர்கடொழுதேத்துமப்பன்றன்னை யமரர்கடம்பெருமானையானை மூவாமருந்தமரர்க் கருள்புரிந்தமைந்தன்றன்னைமறி கடலுங்குலவரையு மண்ணுவிண்ணும், திருந்தொளியதாரகையுந்திசைகளெட்டுந் திரிசுடர்களோரிரண்டும்பிறவாமாய பெருந்தகையைப்பெரும்பற்றப்புலியூரானைப்பேசாதநாளெல்லாம் பிறவாநாளே ௪

அருந்துணையையடியார்தமல்லறீர்க்குமருமருந்தையகன்ஞாலத்தகத்துட்டோன்றி, வருந்துணையுஞ்சுற்றமும்பற்றும்விட்டு வான்புலன்களகத்தடக்கி மடவாரோடும்பொருந்துணைமேல் வரும்பயனைப்போகமாற்றிப்பொதுநீக்கித்தனை நினையவல்லலாகும், பெருந்துணையைப்பெரும்பற்றப்புலியூரானைப் பேசாதநாளெல்லாம்பிறவாநாளே ௫

கரும்பமரும்மொழிமணவாள் பங்கன்றன்னைக்கனவயிரக்குன்றனையகாட்சியானை, யரும்பமரும்பூங்கொன்றைத்தாரான்றன்னையருமறையோ டாறங்கமாயினானைச்சுரும்பமருங்கடிபொழில்கள் சூழ்தென்னாரூர், சுடர்க்கொழுந்தைத்துளக்கில்லாவிளக்கைமிக்கபெரும்பொருளைப்பெரும்பற்றப்புலியூரானைப் பேசாதநாளெல்லாம்பிறவாநாளே. ௬

5

LIIX